**காரீப் பருவத்தில் பயிர் செய்துள்ள விவசாயிகள் கவனத்துக்கு...**

First Published : 26 Jun 2010 10:46:33 AM IST

சங்ககிரி, ஜூன் 25: காரீப் பருவத்தில் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் வானிலை பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் உரிய தவணை செலுத்தி சேர சங்ககிரி வேளாண்மை உதவி இயக்குநர் ப.சௌந்திரராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

காரீப் பருவத்தில் சாகுபடியாகும் கார் நெல், சம்பா நெல், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, தோட்டக்கலைப் பயிர்கள் ஆகிய பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் வானிலை பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா நிறுவனம் நிர்ணயித்துள்ள இறுதி தேதிக்குள் விருப்பமுள்ள கடன்பெறா விவசாயிகள் உரிய தவணை செலுத்தி சேர வேண்டும்.

வானிலை பயிர் காப்பீட்டுத் திட்டம் என்பது பயிர் சாகுபடி பருவத்தில் காலத்தில் வானிலையில் ஏற்படும் மாற்றங்களான குறைந்த வெப்பநிலை, அதிகபட்ச வெப்பநிலை, ஈரப்பதம், காற்றின் வேகம், குறைந்த மழை, கூடுதல் மழை, மழையின்மை ஆகிய காரணங்களால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு உரிய நிவாரணமாக அறிவியல் பூர்வமாக கணக்கிட்டு விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் காரீப் பருவத்தில் பயிரிடப்படும் உளுந்து, பாசிப்பயறு, துவரை போன்ற பயறுவகைகள், நிலக்கடலை, எள், சூரியகாந்தி, மக்காச்சோளம், கம்பு, ராகி, சோளம், மரவள்ளி, காய்கறிப் பயிர்கள், மஞ்சள் ஆகிய பயிர்களுக்கு ஜூலை 5ம் தேதியும், பருத்தி, வாழை ஆகிய பயிர்களுக்கு ஜூலை 31ம் தேதியும், சம்பா நெல்லுக்கு ஜூலை 10ம் தேதியும் தவணை செலுத்த இறுதி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டத்தில் சேரும் விவசாயிகள் உளுந்து, பாசிப்பயறு, துவரை போன்ற பயறுவகைகள் மற்றும் ராகி, சோளம் ஆகிய பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.138ம், கம்பு பயிருக்கு ரூ.193ம், சம்பா நெல்லுக்கு ரூ.221ம், எள் சூரியகாந்தி பயிர்களுக்கு ரூ.232ம், மக்காச்சோளத்திற்கு ரூ.276ம், நிலக்கடலைக்கு ரூ.386ம், மானாவாரிப் பருத்திக்கு ரூ.529ம், இறவை பருத்திக்கு ரூ.827ம், மரவள்ளிக்கு ரூ.794ம், காய்கறிப் பயிர்களுக்கு ரூ.927ம், மஞ்சளுக்கு ரூ.993, வாழைக்கு ரூ.2647ம் தவணையாக செலுத்த வேண்டும். கடன்பெறும் விவசாயிகள் இத்திட்டத்தில் கட்டாய அடிப்படையிலும், கடன் பெறா விவசாயிகள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்பவும் சேர முடியும்.

ஒவ்வொரு விவசாயியும் அவரது பெயரிலேயே சேமிப்பு வங்கி கணக்கு வைத்திருப்பது அவசியம். தங்கள் ஊருக்கு அருகில் உள்ள கூட்டுறவு வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றை அணுகி இத்திட்டத்திற்கான முன்மொழிவு படிவத்தை பூர்த்தி செய்து தவணை தொகையை செலுத்தலாம்.

காரீப் பருவ பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளில் விருப்பமுள்ளவர்கள் உரிய காலத்திற்குள் இத்திட்டத்தில் சேர்ந்து பயிர் காப்பீடு செய்து பயனடையலாம் என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**தூத்துக்குடியில் ஜூலை 17-ல் விவசாயத் தொழிலாளர் மாநாடு**

First Published : 25 Jun 2010 12:39:12 PM IST

Last Updated : 25 Jun 2010 05:36:06 PM IST

திருச்செந்தூர்,ஜூன் 24: தூத்துக்குடியில் ஜூலை 17,18,19-ம் தேதிகளில் அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தேசிய அளவிலான 7-வது மாநாடு நடைபெறுகிறது.

இதற்கான பணிக்குழு அமைப்புக் கூட்டம் திருச்செந்தூரில் செவ்வாய்க்கிழமை இவ் வமைப்பின் தூத்துக்குடி மாவட்ட தலைவர் சு.பன்னீர் செல்வம் தலைமையில் நடைபெற்றது.

மாநில செயலர் மலைவிளைபாசி, மாவட்ட செயலர் செ.ரவிச்சந்திரன், மாவட்ட பொருளாளர் செ.அப்பாகுட்டி, சிபிஎம் மாவட்ட செயலர் க.கனகராஜ் , சிஐடியு மாவட்ட செயலர் தி.குமாரவேல், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட செயலர் கே.பி.பெருமாள், துணைத் தலைவர் தி.சீனிவாசன், சிபிஎம் திருச்செந்தூர் ஒன்றிய செயலர் பெ.தமிழ்செல்வன் உள்ளிட்ட பலர் கூட்டத்தில் உரையாற்றினர்.

மாநாட்டு பணிக்குழுத் தலைவராக சிஐடியு மாவட்ட செயலர் தி.குமாரவேல், செயலராக செ.ரவீச்சந்திரன்,பொருளாளராக செ.அப்பாகுட்டி, புரவலர்களாக சிபிஎம் மாவட்ட செயலர் க.கனகராஜ், மாநிலக் குழு உறுப்பினர் ஆர்.மல்லிகா, சிஐடியு மாநிலச் செயலர் ஆர்.ரசல், துணைத் தலைவர்களாக சு.பன்னீர் செல்வம், கே.பி.பெருமாள்,வி.பாலசுப்பிரமணியன், வே.ஆறுமுகம், ருக்மனி உள்ளிட்ட 15 தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டனர்.

இணை செயலர்களாக ஆ.துரைராஜ், ம.தேவாரம், ம.ஜெயபாண்டியன், என்.வெங்கடேஷ், எஸ்.மரகதம் உள்ளிட்ட 15 பேரும், 34 பேர் கொண்ட பொதுக்குழு, 25 பேர் கொண்ட செயற்குழு, 10 பேர் கொண்ட நிதிக்குழு, 6 பேர் கொண்ட விளம்பரக்குழு, 5 பேர் கொண்ட பேருந்துக் குழு, 8 பேர் கொண்ட பிரசாரக் குழு உள்ளிட்டக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இம் மாநாடு தொடர்பாக கிராமங்கள் தோறும் கூட்டங்கள் மற்றும் பிரசாரங்கள் மேற்கொள்வது. மாநாட்டில் கிராம மக்களை திரளாக கலந்து கொள்ள செய்வது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

திருச்செந்தூர் ஒன்றியத் தலைவர் கல்யாணசுந்தரம் வரவேற்றார். ஒன்றியச் செயலர் கந்தசாமி நன்றி கூறினார்.

**கரும்பில் அதிக மகசூல் பெற எளிய தொழில்நுட்பம்: விவசாயத்துறை யோசனை**

First Published : 25 Jun 2010 11:54:12 AM IST

Last Updated : 25 Jun 2010 05:33:43 PM IST

தேனி, ஜூன் 24: கரும்பு சாகுபடியில் எளிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என ஆண்டிபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் பெ. கோவிந்தராஜன் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளார்.

இதுகுறித்து, அவர் கூறியதாவது:

கரும்பு பயிரின் மகசூல் திறனை நிர்ணயிக்கும் முக்கியக் காரணி மண்வளம். இயற்கை வேளாண்மை முறைகளான பயிற்சுழற்சி, பசுந்தாள் உரமிடுதல், இயற்கை எருக்கள், பயிர் உழவு முறை, இயற்கை முறையில் களை மற்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை மண் வளமாக மாற உதவுகின்றன.

விவசாயத்திற்கு பயிர் வளர்ச்சிக்குத் தேவையான சத்துகள் மற்றும் நச்சுத்தன்மை இல்லாதிருக்கும் மண் வளம் அமைந்திருக்க வேண்டும். கரும்பு எல்லாவகை மண்களிலும் பயிரிடப்பட்டாலும், நல்ல வடிகால் வசதியுள்ள மண் சாகுபடிக்கு ஏற்றது.

கரும்பு வளர்ச்சிக்கு 6.5 முதல் 7.5 சதவீதம் வரை உள்ள கார அமில நிலை மிகவும் உகந்தது. ஒன்றரை அடி ஆழம் வரை மண் இறுக்கம் இல்லாமல் மிருதுவாக இருக்க வேண்டும். கரிமச் சத்து, ஊட்டச் சத்துகள் போதிய அளவில் இருக்க வேண்டும்.

தொழு உரம், கம்போஸ்டு எரு, பசுந்தாள் உரம், கரும்பாலை ஆலைக் கழிவு, கரும்புத் தோகை ஆகியவற்றை இட்டு மண்ணின் இயல்பு குணங்களை சீர்படுத்தலாம்.

கரும்பு பயிரிடப்படும் நிலம் களர் நிலமாக இருப்பின், இரும்புச் சத்து பற்றாக்குறை ஏற்பட்டு மகசூல் குறைந்து காணப்படும். இலைகள் மஞ்சள் நிறத்தில் வெளுத்து, பயிர் வளர்ச்சி பாதிக்கப்படும். அமிலகார நிலை (பி.எச்.,) 9-க்கு மேல் இருந்தால், எல்லா கரும்புகளும் காய்ந்துவிடும். களர் நிலத்தில் 0.1 யூனிட் பி.எச்., குறைப்பதற்கு ஏக்கருக்கு 400 கிலோ ஜிப்சம் இட வேண்டும். தொழு எரு, கம்போஸ்டு அல்லது கரும்பு ஆலை அழுக்கு 10 முதல் 15 டன்கள் இட வேண்டும்.

கரும்பு பயிரின் வளர்ச்சிக்கு 16 ஊட்டச் சத்துக்கள் தேவைப்படுகின்றன. இவற்றில் ஒன்றில் பற்றாக்குறை ஏற்பட்டாலும், பயிர் வளர்ச்சி பாதிக்கப்படும். கடந்த பல ஆண்டுகளாக தழை, மணி, சாம்பல் சத்து உரங்களாகவே இடுவதாலும், தொழு உரம், கம்போஸ்டு, பசுந்தாள் உரங்கள்

இடாததாலும் நிலத்தின் உற்பத்தி திறன் வெகுவாகக்  குறைந்துவிட்டது. அங்ஙக உரங்கள் இடுவதால் மகசூல் அதிகரிப்பதுடன், நுண்ணுயிர் பெருக்கம் ஏற்பட்டு மண்ணிலுள்ள சத்துகளை பயிர்கள் எடுத்துக்கொள்வதற்கு எளிதாகிறது.

கரும்பு நடவுசெய்த 20 முதல் 30 நாள்களுக்கு பார்களுக்கு இடைப்பட்ட பகுதியில், வரிசையாக தக்கைப்பூண்டு அல்லது சணப்பை ஊடுபயிராக நடவு செய்யலாம். இவற்றை பூ பிடிக்கும் பருவத்தில் பிடுங்கி பாரின் இருபுறமும் அமுக்கி மண் அணைக்கலாம். இதனால் களைகள் கட்டுப்படுத்தப்படுவதுடன் தழைச்சத்து மற்றும் நுண்ணுயிர்கள் மண்ணில் அதிகரிக்கும்.

நடவுசெய்த மூன்றரை மாதம் முதல் 10 மாதம் வரை 2 அல்லது 3 முறை தோகைகளை உரித்து பார்களின் இடைப்பட்ட பகுதிகளில் பரப்பலாம். தோகை பரப்புவதால் வறட்சி தாங்கும் தன்மை ஏற்படுகிறது. களைகள் கட்டுபடுத்தப்படுகின்றன. தோகை எரிக்கப்படும் போது, மண்ணில் பயன் தரும் நுண்ணுயிர்கள், மண் புழுக்கள் மடிந்து விடுகின்றன. இதனால் மறுதாம்பு பயிர்கள் மகசூல் வெகுவாக பாதிக்கப்படும்.

கரும்புத் தோகையைப் பயன்படுத்தி, மண்புழு உரம் தயாரித்து மண்ணின் கரிம மக்கை மேம்படுத்தலாம். பயிர் சாகுபடிக்கு முன், மண் பரிசோதனை செய்து மண்ணில் உள்ள சத்துக்களின் அளவுகளை அறிந்து உரம் இட வேண்டும்.

சொட்டுநீர் உரப் பாசனம் மூலம் தேவையான நேரத்தில் தேவையான அளவு தண்ணீர் மற்றும் உரங்களை பயிர்களுக்கு அளிக்க முடிகிறது. மேலும் சொட்டுநீர் பாசன முறையில் களைகள் முளைப்பது குறைவு. எனவே கரும்பு சாகுபடிக்கு சொட்டுநீர் பாசன முறையை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.

கரும்பு பயிருக்கு நுண்ணுயிர் உரங்கள் இடுவதால், வேர்களை சுற்றி மண்ணில் தங்கி வளர்ந்து காற்றிலுள்ள தழைச் சத்தை கிரகித்து பயிருக்கு அளிக்கும். நுண்ணுயிர் உரங்களான அசோஸ் பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா ஆகியவறை, ஏக்கருக்கு 4 கிலோ அளவில் ஒரு கிலோ கம்போஸ்டு அல்லது தொழு உரத்துடன் கலந்து பாஸ்பேட் உரத்தை இட்ட பிறகு, நடவுகால்களில் கரும்பு நடுவதற்கு முன் இட வேண்டும்.

துத்தநாகச் சத்து, இரும்புச் சத்து பற்றாக்குறையினால் பயிர்களின் இலை மஞ்சளாகி வெளுத்து காணப்படும். இதற்கு ஹெக்டேருக்கு 2 கிலோ பெரஸ்சல்பேட், ஒரு கிலோ துத்தநாக சல்பேட், 2 கிலோ யூரியா ஆகியவற்றை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து கைத்தெளிப்பான் மூலம் கரும்புப் பயிர் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும்.

இத்தகைய எளிய தொழில்நுட்ப முறைகளைக் கடைபிடித்து, அதிகமான உரம், பூச்சி, களை, பூசானக்கொல்லி மருந்துகளை தவிர்த்து, மண் வளத்தை பெருக்கி கரும்பு மகசூலை அதிகரிக்கலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் பெ.கோவிந்தராஜன் தெரிவித்துள்ளார்.

**குறைந்தது குறுவை சாகுபடி**

First Published : 25 Jun 2010 11:49:45 AM IST

தஞ்சாவூர், ஜூன் 24:  தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழாண்டில் குறுவை சாகுபடி மிகவும் குறைவான பரப்பளவில்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு மின் வெட்டு முக்கியக் காரணமாக விளங்குகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இயல்பான குறுவை சாகுபடி பரப்பு 40,000 முதல் 43,000 ஹெக்டேர் ஆகும். மேட்டூர் அணையில் போதிய அளவுக்கு தண்ணீர் இருந்து, வழக்கம்போல ஜூன் 12-ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டால், குறுவையில் இயல்பு நிலை சாகுபடி சாத்தியமாகும்.

ஆனால், நிகழாண்டில் மேட்டூர் நீர் இருப்பு குறைவாக உள்ள நிலையில், இதுவரை தண்ணீர் திறக்க முடியாத நிலைதான் உள்ளது.

எனினும், பம்புச் செட் மூலம் ஆழ்குழாய்க் கிணறுகளில் இருந்து பாசனம் மேற்கொண்டபோதுகூட, கடந்தாண்டுகளில் சுமார் 22,000 ஹெக்டேர் வரை குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், நிகழாண்டில் இதுவரை 7,050 ஹெக்டேர்தான் குறுவை சாகுபடி நடைபெற்றுள்ளது. அதாவது, பம்புசெட் மூலம் நடைபெறும் சாகுபடியில் பாதி அளவுகூட நடைபெறவில்லை.

இதற்கு மின் வெட்டுதான் பிரதானக் காரணமாக விவசாயிகள் கூறுகின்றனர். எப்போது மின் விநியோகம் இருக்கும், மின் தடை ஏற்படும் என்ற நிச்சயமற்ற சூழல் நிலவுவதால், பம்புசெட் இருந்தும் குறுவை சாகுபடி மேற்கொள்ள விவசாயிகள் தயங்குகின்றனர்.

இதனால் சம்பா பருவத்தைத்தான் விவசாயிகள் எதிர்நோக்கி இருக்கின்றனர். தஞ்சை மாவட்டத்தில் 1.05 ஹெக்டேர் நிலப் பரப்பில் சம்பா நடவு மேற்கொள்ளப்படும். அதற்குள் மேட்டூரில் அணையில் போதிய அளவு நீர் இருப்பு இருக்கும் என்று நம்பப்படுகிறது.

எனவே, சம்பா பருவத்துக்குத் தேவையான விதை நெல், உரம், கடனுதவி போன்ற வசதிகளை முன்னேற்பாடுகளுடன் போதிய அளவு இருப்பில் வைத்திருக்க வேளாண்மை துறை உரிய

**தட்டை பயறு விலை குறைவு விவசாயிகள் கவலை**

First Published : 27 Jun 2010 11:01:33 AM IST

கோபி, ஜூன் 26:  கோபி பகுதியில் தட்டைப் பயிர் சாகுபடி விறுவிறுப்பாகத் தொடங்கியுள்ளது. அதிக விளைச்சல் காரணமாக தட்டைப் பயிர் விலை சற்று குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலைப்பட்டு வருகின்றனர்.

÷கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் உள்ளிட்ட பகுதியில் கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், முள்ளங்கி, புடலை உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்கள் சமீப காலமாக அதிகளவில் பயிரிடப்படுகிறது. ஆண்டு முழுவதும் தண்ணீர் வசதி கொண்ட கோபி பகுதியில் விளையும் தோட்டக்கலை பயிர்கள் நல்ல சுவையும், அதிக எடையும் கொண்டதாக விளங்குவதால் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

÷பருவமழை தவறியதால் குறைந்த தண்ணீர் தேவைப்படும் தட்டைப் பயிர்களை கோபி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பயிரிட்டனர்.

தற்போது தட்டைப் பயிர் முற்றி அறுவடைக்குத் தயார் நிலையில் உள்ளது. கோபி, சிறுவலூர், குருமந்தூர், கடத்தூர், பொலவக்காளிபாளையம், கள்ளிப்பட்டி, துறையம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் தட்டைப் பயிர் அறுவடை தொடங்கியுளளது.

முற்றிய தட்டைப் பயிரைக் காய வைத்து விற்பனை செய்ய சில மாதங்களாகும். ஆனால் கேரளத்தில் முற்றாத இளம் தட்டைப் பயிர்களுக்கு நல்ல கிராக்கி உள்ளது.

கேரளம் மற்றும் தமிழகத்தில் முற்றாத இளம் தட்டைப் பயிர், பொரியலில் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. உடனடியாக வருமானம் கிடைப்பதால் கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் தண்டுடன் கூடிய தட்டை பயிரை அறுவடை செய்து உடனடியாக விற்பனை செய்கின்றனர். கடந்த போகத்தில் ஒரு கிலோ தண்டுடன் கூடிய தட்டைப் பயிறு 12 ரூபாய் வரை விற்றது.

÷கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள அதிக விளைச்சல் காரணமாக தற்போது ஒரு கிலோ தட்டைப் பயிர் ஆறு ரூபாயாக குறைந்து விட்டது.

இதனால் அதிக விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தட்டைப் பயிரை பயிரிட்ட கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஏமாற்றத்தில் உள்ளனர்.

**காய்கறி விதைகள் விநியோகம்**

First Published : 27 Jun 2010 09:57:24 AM IST

பண்ருட்டி, ஜூன் 26: வீட்டுத் தோட்டம் அமைக்க தேவையான காய்கறி விதைப் பொட்டலம் விநியோகம் செய்ய தயாராக உள்ளதாக தோட்டக்கலை உதவி இயக்குநர் வீ.பிரேமா தெரிவித்துள்ளார்.

÷அவர் வெளியிட்டுள்ள செய்தியில் அண்ணாகிராமம் வட்டாரத்தில் நடப்பு ஆடிப் பட்டத்தில் விதைப்பு செய்ய ஏதுவாக, வீட்டுத் தோட்டம் அமைக்க காய்கறி விதை பொட்டலம் உள்ளது. இதில் கீரை, வெண்டை, கத்தரி, பீர்க்கை, பூசனி, புடலை, பாகல், பரங்கி, அவரை, மிளகாய் விதைகள் உள்ளன. மேற்கண்ட விதைப் பொட்டலம் ரூ.20 என்ற விலையில் விநியோகம் செய்யப்படுகிறது.

÷எனவே தேவைப்படுவோர் அண்ணாகிராமம் வட்டார வேளாண்மை மையத்தில் நேரிடையாகவோ அல்லது தோட்டக்கலை உதவி அலுவலர்கள் மூலமாகவோ பெற்று பயனடையலாம் என வீ.பிரேமா தெரிவித்துள்ளார்.

**தோட்டக்கலைத் துறை சார்பில் 250 விவசாயிகளுக்கு பயிற்சி**

First Published : 27 Jun 2010 10:43:47 AM IST

உதகை, ஜூன் 26: நீலகிரி மாவட்டத்தில் தோட்டக் கலைத் துறையின் சார்பில் 250 விவசாயிகளுக்கு இம்மாதம் 28ம் தேதி முதல் பயிற்சி மற்றும் கல்வி சுற்றுலாத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இது தொடர்பாக மாவட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெகதீஷ்குமார் தெரிவித்துள்ளதாவது:

உதகை மற்றும் மஞ்சூர் வட்டங்களைச் சேர்ந்த 250 விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் உள் மாநில பயிற்சி மற்றும் கல்வி சுற்றுலா திட்டங்கள் இம்மாதம் 28ம் தேதி தொடங்குகிறது. முதற்கட்டமாக ஜூன் 28ம் தேதி முதல் ஜூலை 2ம் தேதி வரை 100 விவசாயிகளுக்கும், ஜூலை 6ம் தேதி முதல் 10ம் தேதி வரை 150 விவசாயிகளுக்கும் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

இதில் தமிழகத்திலுள்ள வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண்மைக் கல்லூரிகள் மற்றும் பயிற்சி நிலையங்களுக்கும், அரசு தோட்டக்கலைப் பண்ணைகளுக்கும் விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளனர்.

தலா 5 நாட்களுக்கு நடைபெறும் இப்பயிற்சியில் முதல் நாளன்று கோவை வேளாண் பல்கலைக்கழகத்திலும், இரண்டாம் நாள் பெரியகுளம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும், மூன்றாம் நாள் மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலும், நான்கு மற்றும் ஐந்தாம் நாட்களில் கன்னியாகுமரி மற்றும் குற்றாலம் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

ஜூன் 28ம் தேதி முதல் ஜூலை 2ம் தேதி வரையிலான பயிற்சியில் நஞ்சநாடு, இத்தலார், பாலகொலா, மேல்கவ்வட்டி, கீழ்கவ்வட்டி மற்றும் குருத்துக்குளி கிராமங்களை சேர்ந்த 100 விவசாயிகளை துணை வேளாண்மை அலுவலர் கண்ணன் தலைமையில் உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமச்சந்திரன், ஆர்.டி.சந்திரன், மற்றும் கே.போஜன் ஆகியோர் அழைத்து செல்வர்.

ஜூலை 2ம் தேதி முதல் 10ம் தேதி வரையிலான பயிற்சியில் தும்மனட்டி, கெந்தொரை, தூனேரி, இடுஹட்டி, கடநாடு, கல்லட்டி, சோலூர் மற்றும் நுந்தளா கிராமங்களை சேர்ந்த 150 விவசாயிகளை துணை வேளாண்மை அலுவலர் தேசிங்கு தலைமையில் உதவி வேளாண்மை

அலுவலர்கள் பி.கிருஷ்ணன், ஜே.பெள்ளி, என்.அஜ்ஜன், பி.தேவராஜ் மற்றும் பி.ஆல்துரை ஆகியோர் அழைத்து செல்வர்.

முந்தைய ஆண்டுகளில் நடைபெற்ற இத்தகைய பயிற்சிகளில் பங்கேற்ற விவசாயிகள் நடப்பாண்டில் பங்கேற்க முடியாது.

எனவே, இதுவரையிலும் இத்தகைய பயிற்சி பெறாத விவசாயிகள் தற்போது நடைபெறும் பயிற்சி முகாம்களில் பங்கேற்று பயனடையலாம். இதுகுறித்த விவரங்கள் தங்களது பகுதிகளிலுள்ள உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் துணை வேளாண்மை அலுவலர்களை அணுகி பெற்றுக் கொள்ளலாம் எனவும் உதவி இயக்குநர் ஜெகதீஷ்குமார் தெரிவித்துள்ளார்.

**தேயிலை விவசாயிகளுக்கு ஊடு பயிர் தயார்**

First Published : 27 Jun 2010 10:43:26 AM IST

குன்னூர், ஜூன் 26: தேயிலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊடுபயிரான சில்வர் ஓக் மரக்கன்றுகள் தயார் நிலையில் இருப்பதாக வனத்துறை அதிகாரி பால்ராஜ் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தின் முக்கியப் பணப்பயிரான தேயிலை சாகுபடியின் போது வெப்பத்தில் இருந்து தேயிலை செடிகளைக் காக்க சில்வர் ஓக் மரங்களை ஊடுபயிராக நடுவது வழக்கம். இவை சில ஆண்டுகள் வளர்ந்தபின் அவற்றை விறகுக்காக விவசாயிகள் விற்பனை செய்து விடுவர். காலியாக உள்ள நிலப்பரப்பில் மேற்கொண்டு நிழல் தரும் மரங்களை நடுவதற்கு வனத்துறை சார்பில் சில்வர் ஓக் மரக்கன்றுகள் வழங்கப்படும். இந்நிலையில் இந்த ஆண்டிற்கான சில்வர் ஓக் மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளதால் 2.5 ஏக்கருக்கு மேல் தேயிலை பயிர் செய்து வரும் விவசாயிகள் இந்த மரக்கன்றுகளை வனத்துறையிடம் இருந்து பெற்றுக் கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மரக்கன்றுகளின் பராமரிப்பு செலவிற்காக ஒரு கன்றுக்கு ரூ.5 வீதம் வழங்கப்படும் என்று வனத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கத்தரி பயிரிட்டுள்ள விவசாயிகள் வேதனை : பூச்சி தாக்குதல் திடீர் அதிகரிப்பு**

செஞ்சி: கத்தரிக்காயில் அதிகளவில் பூச்சி தாக்குதல் இருப்பதால் கத்தரி சாகுபடி செய்துள்ள வணக்கம் பாடி விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.செஞ்சி தாலுகா வணக் கம்பாடி, கோடி கொல்லை கிராமங்களில் 150க்கும் அதிகமான சிறு விவசாயிகள் தொடர்ந்து பல ஆண்டுகளாக கத்தரிக்காய் சாகுபடி செய்கின் றனர்.
கத்தரிக்காய் சாகுபடியில் அனைத்து நுணுக்கங்களையும் இப்பகுதி விவசாயிகள் நன்கு அறிந்துள்ளனர். ஒருமுறை கத்தரி நட்ட நிலத்தில் அடுத்து மாற்று பயிர் செய்த பின்னரே மீண்டும் கத்தரிக்காய் சாகுபடி செய்கின் றனர்.இவர்களின் நிலத்தின் ஒருபகுதியில் எப்போதும கத்தரிக்காய் செடிகள் கண்டிப்பாக இருக்கும். ஒவ்வொருவரும் 50 சென்ட் முதல் 1 ஏக்கர் வரை கத்தரிக்காய் சாகுபடி செய்துள்ளனர்.நடவு செய்த 60 நாட்களுக்கு பிறகு ஏக்கருக்கு வாரம் ஒன்றிற்கு 15 மூட்டை (ஒரு மூட்டை 60 கிலோ) வரை காய் பறிக் கின்றனர்.

இதை செஞ்சி, திண்டிவனம் பகுதி காய்கறி கடைகளுக்கு சப்ளை செய்கின்றனர்.இந்த விவசாயிகளின் அனுபவத்திற்கு சவால் விடும் வகையில் தற் போது கத்தரிக்காய்களில் பூச்சி தாக்குதல் திடீரென அதிகரித்துள்ளது. இதனால் பிஞ்சிலேயே கத்தரிக்காய்கள் சொத்தையாகி விடுகின்றன.விளையும் கத்தரிக்காயில் பாதிக்கும் அதிகமாக சொத்தையாகி விடுகின் றன. இதை தடுக்க அடிக் கும் பூச்சி மருந்துகளால் எந்த பயனும் இல்லை என்கின்றனர் விவசாயிகள்.தற்போது செஞ்சி, திண்டிவனம் காய்கறி கடைகளுக்கு பண்ருட்டி பகுதியில் இருந்து கத்தரிக்காய் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது. மொத்த விலையில் கிலோ 5 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்குகின்றனர். இதில் போக்குவரத்து செலவு, மூட்டை தூக்குபவர்களின் கூலி போக விவசாயிகளுக்கு கிலோ ஒன் றுக்கு 4 ரூபாய் கிடைக்கிறது.

கிராமப்புறங்களில் நடக்கும் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினால் களை எடுக்கவும், காய் பறிக்கவும் போதிய ஆட்கள் கிடைப்பதில்லை. கூலியும் கடந்த இரண்டாண்டில் இரு மடங்காக உயர்ந்துள்ளது.கடந்த ஆண்டுவரை அன்றாட வீட்டு செலவுக்கும், பிள்ளைகளின் படிப்பு செலவுக்கும் கை கொடுத்து வந்த கத்தரி சாகுபடி இந்தாண்டு பூச்சி தாக்குதலால் சாகுபடிக்கு செய்த செலவையும் எடுக்க முடியாமல் வணக் கம்பாடி, கோடிகொல்லை பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை**

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை பேரூராட்சி 9வது வார்டில் கால்நடைகளுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடந்தது.முகாமிற்கு வார்டு கவுன் சிலர் எழிலன் தலைமை தாங்கினார். அரசு கால் நடை மருத்துவர்கள் மனோ கரன், வளர்மதி ஆகியோர் 30 கால்நடைகளுக்கு பரிசோதனை செய்து குடற் புழு நீக்கம், செயற்கை கருவூட்டல் சிகிச்சை மேற் கொண்டனர்.

**நீர்வள நிலவளத் திட்ட செயல்விளக்க முகாம்**

திண்டிவனம்: திண்டிவனம் எண் ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் டி.பாஞ்சாலம் கிராமத்தில் உளுந்து சாகுபடியில் இயந்திரமயமாக்கல் குறித்த செயல் விளக்க முகாம் நடந்தது.உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படும் நீர் வள நிலவள திட்டத்தின் மூலம் ஓங்கூர் உபவடிநீர் பகுதியான ஒலக்கூர் வட்டம் டி.பாஞ்சாலம் கிராமத்தில் துரைராஜ் என்ற விவசாயி வயலில் விவசாயிகளுக் கான நீர்வள நில வளத் திட்ட செயல்விளக்க முகாம் நடந்தது.எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர் ராம மூர்த்தி, உதவி பேராசிரியர் அன்புமணி பங்கேற்று உளுந்து விதைப்பு இயந்திரத்தின் மூலம் விவசாயிகளுக்கு நவீன சாகுபடி முறைகள் குறித்து செயல் விளக்கமளித்தனர்.ஒலக்கூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிவேல் மற்றும் வேளாண் அதிகாரிகள் கலந்து கொண்டனர். ஓங்கூர் உபவடிநீர் பகுதி விவசாயிகள் 40க்கும் மேற்பட்ட முன் னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விதைகள், உரங்களை மானியத்தில் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

விழுப்புரம்: விவசாய பருவத்திற்கான விதைகள், உரங்களை மானியத்துடன் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.
விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் கலெக்டர் பழனிசாமி தலைமையில் நடந்தது. மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ரேணுகாம்பாள், நீர், நிலவளத் துறை அதிகாரி அரங்கநாதன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:சரோஜினி: மலட்டாறு வாய்க் காலில் உடைந்த பகுதிகளை உடனே சீரமைக்க வேண்டும்.கலெக்டர்: 10 நாளில் சரி செய்யப்படும். விவசாயிகள் குறைகள் குறித்த மனுக்களுக்கு அதிகாரிகள் இரண்டு வாரத்திற்குள் பதிலளிக்க வேண்டும்.ராமராஜன்: மழைப்பருவ விவசாயம் துவங்குவதால் பாசன வாய்க் கால் சீரமைக்க வேண்டும். மானியத்துடன் விதைகளையும், மின்சாரம் தடையின்றியும் வழங்கிட வேண் டும். தோட்டக்கலைத் துறையினர் காய்கறி விதைகளை வழங்க வேண்டும். மின் அழுத்த பிரச்னைகளை தவிர்க்க 3 பேஸ் சப்ளை முழுமையாக வழங்க வேண்டும்.முத்துமல்லா: மழைக் காற்றில் மடியாத புதிய ரக

நெல்விதைகளையும், தக்க பூண்டு விதைகளும் வழங்கவேண்டும். கூட்டுறவு வங்கியில் உரங்கள் கிடைக்கவில்லை.

சுப்ரமணி: வராகநதி திட்டத்தில் 237 ஏரிகள் சீரமைப்பில் முழுவதும் மோசடிகள் நடந்துள்ளது குறித்து நடவடிக்கை வேண்டும். புதிய ரேஷன் கார்டுகள் வழங்கப்படுவதில்லை.

கலெக்டர்: முறைகேடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும், மாவட்டத்தில் 9.26 லட்சம் ரேஷன் கார்டுகள் உள்ளது. இதில் ஒரு லட்சத்து 5000 கார்டுதாரர்கள் வெளியூர்களில் வசிப்பவர்களாக உள்ளனர். 15 ஆயிரம் கார்டுகள் விசாரணையில் உள்ளது, விரைவில் வழங்கப்படும்.ஐயங்கார்: பெண்ணையாற்றில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்ட போர் வெல் காரணமாக (விழுப்புரம், ரிஷிவந்தியம்) நிலத்தடி நீர் குறைந்துள் ளது. நீண்ட கால கோரிக்கையாக உள்ள இந்த இடங்களில் தடுப்பணை கட்ட வேண்டும்.செல்வராஜ்: செஞ்சியிலிருந்து எண்ணாயிரம் வழியாக பெரியதச்சூர் தடத்தில் பஸ் இயக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள், பயணிகள் அவதியடைகின்றனர். கலெக்டர்: போக்குவரத்து அதிகாரிகள் பெரியதச்சூர் வழியாக அந்த பஸ்சை உடனே இயக்க வேண்டும்.இதேபோல் கூட்டுறவு வங்கியில் பயிர்க்கடன்கள் வழங்குவதில்லை, கரும்புக்கும், நகை அடமானத்திற்கு மட்டும் கடன் கொடுக்கின்றனர். டி.ஏ.பி., பொட்டாஷ் உள்ளிட்ட உரங்கள் தட்டுப்பாடு உள்ளது, மின்வெட்டு பிரச்னை சீரமைக்க வேண்டும் என விவசாயிகள் பலர் கோரிக்கை வைத்தனர்.இதற்கு பதிலளித்த அதிகாரிகள், கூட்டுறவு வங்கியில் நடப்பாண் டிற்கு 200 கோடி ரூபாய் அளவில் கடன் வழங்க தயாராக உள்ளதாகவும், உரங்கள், விதைகள் வழங்கப்படும் என்றனர்.

**மானிய விலையில் வேளாண் கருவிகள் தமிழக முதல்வருக்கு கோரிக்கை**

திட்டக்குடி,: பின்தங்கிய மங்களூர், நல்லூர் ஒன்றிய பகுதி விவசாயிகளுக்கு தமிழக அரசு 50 சதவீத மானிய விலையில் வேளாண் கருவிகள், விதைகள், உயிர் உரங்கள் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.கடலூர் மாவட்ட இந் திய தேசிய விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் நகர் பெரியசாமி, தமிழக முதல் வர் கருணாநிதி, வேளாண் மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம், கலெக் டர் சீத்தாராமன் ஆகியோருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு:நல்லூர் மற்றும் மங்களூர் ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இங்கு ஏராளமான சிறு, குறு விவசாயிகள் விவசாயத்தை மட்டுமே நம்பி ஜீவனம் செய்து வருகின்றனர். அண்மைக் காலமாக காலம் தவறிய பருவமழை, போதிய மழை இல்லாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விவசாயப் பணி பெரிதும் பாதிப்படைந்துள்ளது.இதனால் விவசாயிகள் விவசாயம் செய்யவோ, விவசாய தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இல்லாமலும் கடுமையாக பாதிப்படைகின்றனர். பின்தங்கிய பகுதியிலுள்ள விவசாயிகளின் நலன் கருதி தமிழக அரசு 50

சதவீத மானிய விலையில் வேளாண் கருவிகள், விதைகள், உயிர் உரங்கள் வழங்கி விவசாயம் தழைக்க மறுவாழ்வு அளிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

**தரமான விதைகளை விதைக்க துணை இயக்குநர் அட்வைஸ்**

சேலம்: "தருமபுரி- கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பருவமழை பெய்ய தொடங்கியுள்ளதால், தரமான விதைகளை வாங்கி விதைக்க வேண்டும்' என, விதை ஆய்வு துணை இயக்குநர் பழனிசாமி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: உரிமம் பெற்ற கடைகளிலேயே விதைகளை வாங்க வேண்டும். விதைகளை வாங்கும் போது, பயிர், ரகம், நிலை குவியல் எண் முளைப்புதிறன் மற்றும் காலாவதி நாள் ஆகிய விபரங்கள் சரியாக உள்ளதா என பார்க்க வேண்டும். வாங்கிய விதைகளுக்கு கடைக்காரரிடமிருந்து விற்பனை பட்டியல் அவசியம் பெறவேண்டும். விதையின் தரம் குறித்த அறிக்கையினை விற்பனையாளரிடம் கேட்டு சரிபார்க்கவும். பி.டி. ரக பருத்தி விதைகள் வாங்கும்போது, மத்திய அரசால் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளதா என அறிந்து வாங்க வேண்டும். விதைகள் சம்பந்தமாக பிரச்னை இருந்தால், பகுதி விதை ஆய்வாளரையோ அல்லது விதை ஆய்வு துணை இயக்குநரையோ, விதை ஆய்வு துணை இயக்குநர், விதை பரிசோதனை நிலையம், மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகம், தருமபுரி-636 795. என்ற முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**ஆத்தூர் விற்பனை சங்கத்தில் மஞ்சள் விலை சரிவு**

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்துக்கு குறைந்தளவே மஞ்சள் மூட்டைகள் வந்தன. குவிண்டால் 15 ஆயிரத்து 895 ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்த மார்ச் மாதம் துவங்கிய முதல் ஏலத்தில் குவிண்டால் மஞ்சள் 10 ஆயிரத்து 789 ரூபாய்க்கு விற்றது. அடுத்தடுத்து வாரங்களில் நடந்த ஏலத்தில் ஒரு குவிண்டால் 14 ஆயிரத்து 669 ரூபாய்க்கு விற்ற மஞ்சள், குவிண்டால் 13 ஆயிரம் ரூபாய்க்கு சரிந்தது. ஏப்ரல் மாதம் குவிண்டால் 14 ஆயிரத்து 169 ரூபாய்க்கு விற்றது. அடுத்தடுத்த வாரங்களில் நடந்த ஏலங்களில் குவிண்டால் 16 ஆயிரத்துகும் மேல் விற்றது. விலை ஏறுமுகத்தில் சென்றதால் விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைக்க துவங்கினர். இந்நிலையில் ஜூன் மாதம் முதல் வாரத்தில் நடந்த ஏலத்தில் பல இடங்களில் விலை சரிவு ஏற்பட்டதால், கடந்த 5ம் தேதி நடக்க இருந்த ஏலத்தை வியாபாரிகள் புறக்கணித்தனர். அதை தொடர்ந்து நடந்த மஞ்சள் ஏலத்தில் குவிண்டால் 16 ஆயிரத்து 99 ரூபாய்க்கு விற்றது. கடந்த 19ம் தேதி குவிண்டால் 15 ஆயிரத்து 809 ரூபாய் என விலை குறைந்தது. நேற்று முன்தினம் 26ம் தேதி இரவு நடந்த ஏலத்தில் விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 15 ஆயிரத்து 895 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 15 ஆயிரத்து 359 ரூபாய்,

உருண்டை மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 15 ஆயிரத்து 209 ரூபாய், குறைந்த பட்சமாக 14 ஆயிரத்து 669 ரூபாய், பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 18 ஆயிரத்து 889 ரூபாய், குறைந்த பட்சமாக 14 ஆயிரம் ரூபாய்க்கு விற்றது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு மஞ்சள் மூட்டைகள் வரத்து குறைந்து 1,050 மூட்டைகள் கொண்ட 682 குவிண்டால் மஞ்சள் ஒரு கோடியே 5 லட்சம் ரூபாய் என வர்த்தகமும் குறைந்தது. வியாபாரிகள் கூடுதல் விலையை எதிர்பார்த்து அதிகளவு மஞ்சள் இருப்பு வைத்துள்ளதாலும், வர்த்தகம் செய்யும் அளவுக்கு பணம் இல்லாத நிலை நீடித்துள்ளதாலும், மஞ்சள் விலை குறைந்துள்ளது. ஆன்லைன் மஞ்சள் வர்த்தகத்தின் விலை உயர்வுக்கு பின், ஆடி மாதத்துக்கு மேல் மஞ்சள் விலை 17 ஆயிரம் ரூபாய் வரை இருக்கும் என்று வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

**விவசாய தொழிலாளர் கூட்டம்**

ஈரோடு: தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் ஈரோடு மாவட்டக் குழு கூட்டம் ஈரோடு மாவட்ட சங்க அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட தலைவர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் முத்தரசன், மாநில செயலாளர் பெரியசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் குணசேகரன் ஆகியோர் பேசினர்

**கரும்பு விவசாயிகள் சங்க 27வது பேரவை கூட்டம்**

மோகனூர்: சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத்தின் 27வது ஆண்டு பேரவை கூட்டம், நாளை (ஜூன் 29) மோகனூர் நவலடியான் திருமண மண்டபத்தில் மாலை 5 மணிக்கு நடக்கிறது. சங்கத்தலைவர் கந்தசாமி தலைமை வகிக்கிறார். பொதுச்செயலாளர் நடராஜன் ஆண்டறிக்கை வாசிக்கிறார். பொருளாளர் வரதராஜன் வரவு- செலவு கணக்கை தாக்கல் செய்கிறார். புதிய நிர்வாகிகள் மற்றும் நிர்வாகக்குழுவினர் தேர்வு செய்யப்படுகின்றனர். ஆலையின் நிலை குறித்தும், சங்கத்தின் செயல்பாடு பற்றியும், அதன் வளர்ச்சி குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது. "கூட்டத்தில் சங்க நிர்வாகிகள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்க வேண்டும்' என, சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

**நடவு இயந்திர செயல் விளக்கம்**

ஈரோடு: மேவானி மற்றும் பாரியூர் நஞ்ச கவுண்டம்பாளையம் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில், விவசாயிகளுக்கு நடவு இயந்திரங்கள் செயல்முறை விளக்க முகாம் இருநாட்கள் நடந்தது. கோபி சரக துணைப்பதிவாளர் சந்தானம், ஈரோடு மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பாபு, ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர்

லோகநாதன் ஆகியோர் கொண்டனர். விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பயிற்றுனர் ரவி செயல் விளக்கம் அளித்தார். 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விவசாய பயிர் சேதம் தவிர்க்க தடுப்பு வேலி**

தாண்டிக்குடி:மலைப்பகுதி விவசாயங்களை பாழ்படுத்தும் காட்டு மாடு தாக்குதலை சமாளிக்க இரும்பு தடுப்பு வேலிகளை விவசாயிகள் அமைத்துள்ளனர். கீழ்மலைப் பகுதியில் விவசாய நிலங்களில் காட்டு மாடுகள் நடமாட்டம் அதிகம் உள்ளதால் விவசாயிகள் பாதிக்கப் பட்டுள்ளனர். விவசாயப்பயிர்கள் மற்றும் வளர்ப்பு பிராணிகள் தாக்குதலுக்குள்ளாகும் சம்பவங்களும் தொடர்கிறது. வனத்துறையினரிடம் விவசாயிகள் புகார் தெரிவித்தும் நடவடிக்கை இல்லை.

வனத்துறை அமைத்த சோலார் வேலி திட்டமும் பலனளிக்கவில்லை.விவசாயி ஒருவர் கூறுகையில்: காட்டு மாடு தாக்குதலால் விவசாயம் பாதிக்கப்பட்டு கடன் பட்டுள்ளதாகவும் தற்போது ரூ.3 லட்சம் செலவில் 10 அடி உயர முள் வேலி அமைத்து வருவதாகவும், விவசாயிகளுக்கு நிவாரணம் மற்றும் வேலி அமைக்க மானியம் வழங்க மாவட்ட நிர்வாகம் முன் வந்தால் மலை விவசாயிகள் நஷ்டத்திலிருந்து தப்பிக்க முடியும் என்றார்.

**மிளகாய் வற்றல் யாகம்**

கோவில்பட்டி : கோவில்பட்டி அருகே உள்ள சிவஞானபுரம் கோயிலில் உலக நன்மை வேண்டி மிளகாய் வத்தல் யாக பூஜை நடந்தது.
கோவில்பட்டி அருகே உள்ள சிவஞானபுரம் துர்க்கா பரமேஸ்வரி அம்மன் கோயிலில் பவுர்ணமி தினத்தை முன்னிட்டு வத்தல் மற்றும் நெய் கலந்த நிகும் பாலா யாக பூஜை நடந்தது. உலக நலனுக்காகவும் தனி நபர் வேண்டுதலுக்காகவும் பக்தர்கள் காணிக்கையாக மிள காய் வத்தல் மற்றும் நெய் யை காணிக்கையாக அம்மனுக்கு கொடுக்கின்றனர். அந்த காணிக்கைகளை கொ ண்டு ஒவ்வொரு பவுர்ண மி பூஜை அன்றும் யாகம் செய்யப்படுகிறது. துர்க்கா பரமேஸ்வரி அம்மன் கோயில் தலைமை அர்ச்சகர் வேலுச்சாமி தலைமையில் முத்துச்சாமி பட்டர் குழுவினர் யாகசாலை பூஜைகளை நடத்தினர்.

**தக்காளி விலை "கிடுகிடு' உயர்வு**

உடுமலை: உடுமலை தினசரி காய்கறி சந்தையில், தக்காளி வரத்து குறைந்துள்ளதால், விலை உயர்ந்துள்ளது.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஆண்டு முழுவதும் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. தக்காளி வரத்து அதிகரித்தால், கடந்த சில மாதங்களாக விலை இல்லை. ஒரு கிலோ தக்காளி 5 ரூபாய்க்கு குறைவாகவே விற்றது. கோடை வறட்சி காரணமாக தக்காளி

சாகுபடி குறைந்தது. வரத்து குறைந்துள்ளதால், தக்காளி விலை அதிகரித்து வருகிறது.கடந்த சில வாரங்களாக கிலோ 30 ரூபாய்க்கும்; 12 கிலோ கொண்ட பெட்டி 250 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது, மேலும் வரத்து குறைந்துள்ள நிலையில், விலை ஏறியுள்ளது. தக்காளி பெட்டி 400 ரூபாய்க்கும், கிலோ 36 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.தினசரி காய்கறி சந்தை வியாபாரிகள் கூறுகையில்," சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்துள்ளதால், விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வரத்து குறைந்துள்ள நிலையில், வெளியூர் வியாபாரிகள் அதிகளவு தக்காளி கொள்முதல் செய்கின்றனர். தக்காளியின் தேவை அதிகரிப்பால் விலை உயர்ந்துள்ளது. தற்போது, கிலோ 36 ரூபாய்க்கு விற்பனையாகிறது. மேலும், வரத்து குறைந்தால், தக்காளி விலை உயரும் வாய்ப்புள்ளது,' என்றனர்.

**சின்ன வெங்காயம் கொள்முதல் விலை அதிகரிப்பு**

உடுமலை: கொள்முதல் விலை அதிகரித்துள்ளதால் சின்ன வெங்காயத்தை இருப்பு வைத்து விவசாயிகள் விற்பனை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர்.
உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பயிரிடப்படும் சின்னவெங்காயம் மாநிலத்தின் பல பகுதிகளுக்கும், இலங்கை உட்பட வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகளவு இருந்த போது சின்ன வெங்காயத்திற்கு நல்ல விலை கிடைத்தது. இதனால், சாகுபடி பரப்பு பல மடங்கு இப்பகுதியில் அதிகரித்தது.

இந்நிலையில், கடந்த ஒராண்டாக ஏற்றுமதி வாய்ப்புகள் முற்றிலுமாக குறைந்து உள்ளூர் சந்தைகளை அடிப்படையாக கொண்டே சின்ன வெங்காயத்திற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. அறுவடை சீசனில் விலை சரிவினால் விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். கர்நாடகா மாநிலம் மைசூரிலிருந்து அதிகளவு வெங்காயம் உள்ளூர் சந்தைக்கு கொண்டு வரப்படுவதால் போதுமான விலை கிடைக்கவில்லை.பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்தையொட்டி இப்பகுதியில் ஜன., மாதம் சின்ன வெங்காயம் நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பருவமழை இல்லாமல் பயிர்கள் பாதிக்கப்பட்டு அறுவடை குறைந்தது. இந்நிலையில், கொள்முதல் விலையும் கிலோவிற்கு 10 ரூபாயாக குறைந்தது. சாகுபடி செலவு கூட கட்டுப்படியாகாத விலை நிலவரம் இருந்ததால் விவசாயிகள் விளைநிலங்களிலும், பட்டறைகளிலும் வெங்காயத்தை இருப்பு வைத்தனர்.இந்நிலையில், கடந்த இரண்டு வாரங்களாக மைசூரிலிருந்து சின்ன வெங்காயம் வரத்து வெகுவாக குறைந்தது. இதனால், உள்ளூர் சந்தையில் கிராக்கி அதிகரித்து கடந்த ஒரு வாரமாக கொள்முதல் விலை ஏறுமுகத்தில் உள்ளது. தற்போது, விவசாயிகளிடமிருந்து முதல் ரக வெங்காயம் கிலோ 20 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது.இருப்பு வைத்த விவசாயிகள் விலையேற்றத்தையடுத்து வெங்காயத்தை

விற்பனை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். அடுத்த சீசனில் நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் நடவு பணிகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயிகள் கூறுகையில், "சின்ன வெங்காயம் கிலோ 25 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டால் மட்டுமே சாகுபடியில் நஷ்டம் ஏற்படாது. ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரித்து சின்ன வெங்காயத்திற்கு நல்ல விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

---

தினத் தந்தி
DAILY THANTHI

## *ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்க நவீன இயந்திரம் மூலம் பச்சை தேயிலை பறிக்கும் விவசாயிகள்*



மஞ்சூர் பகுதியில் உள்ள ஒரு தேயிலை தோட்டத்தில் ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்க நவீன இயந்திரத்தின் மூலம் பச்சை தேயிலை பறிக்கும் விவசாயி.

*மஞ்சூர், ஜூன்.28–*
*நீலகிரியில் ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்க நவீன இயந் திரம் மூலம் விவசாயிகள் பச்சை தேயிலையை பறித்து வருகிறார்கள்.*

*60 ஆயிரம் சிறு விவசாயிகள்*

*நீலகிரி மாவட்டத்தின் பிரதான தொழிலாக பச்சை தேயிலை விவசாயம் விளங்கி வருகிறது. இந்த பச்சை தேயிலை விவசாயத்தில் சுமார் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு விவசாயிகளும், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும் ஈடுபட்டு வருகின்றனர். பச்சை தேயிலைக்கு கடந்த 1998–ம் ஆண்டு வரை ஒரு கிலோ பச்சை தேயிலை ரூ.18 முதல் ரூ.20 வரை விலை கிடைத்து வந்தது. இதனால் தேயிலை விவசாயிகள் மகிழ்ச்சியுடன் இத்தொழிலில் ஈடுபட்டனர்.*

போராட்டங்கள்
கடந்த சில வருடங்களுக்கு முன்பு இந்த விலை படிப் படியாக குறைந்து ஒரு கிலோவிற்கு ரூ.4 முதல் ரூ.5 வரை கிடைத்தது. இதனை தொடர்ந்து விவசாயிகள் பச்சை தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.15 விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என போராட்டத்தில் ஈடு பட்டனர்.
தேயிலை விலை வீழ்ச்சியால் சுமார் 30 முதல் 40 சதவீத விவசாயிகள் மற்றும் கூலி தொழிலாளர்களும் வேலை தேடி குடும்பத்துடன் கோவை, திருப்பூர் போன்ற பகுதிகளுக்கு சென்றனர். இதனால் நீலகிரி மாவட்டத்தில் விவசாய தொழிலில் ஈடுபட கூலி தொழிலாளர்கள் பற்றாக் குறை ஏற்பட்டது.
தரமான தேயிலை
கடந்த 2005–ம் ஆண்டு தென்னிந்திய தேயிலை வாரிய இயக்குனராக பதவியேற்ற ஆர்.டி.நசீம் ஒவ்வொரு குக் கிராமங்களுக்கும் தேயிலை வாரியம் மற்றும் உபாசி அலுவலர்கள் அடங்கிய குழுக்களை அனுப்பி தரமான தேயிலை பறிக்க விவசாயி களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.
இந்த விழிப்புணர்வால் விவசாயிகள் தங்களது தேயிலை தோட்டங்களை நல்ல முறையில் பராமரித்ததுடன் தரமான பச்சை தேயிலை பறித்து தொழிற் சாலைகளுக்கு வினியோகம் செய்து வருகிறார்கள்.
பருவமழை
நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை நன்றாக பெய்தது. தேயிலை தோட்டங்களில் மகசூல் அதிகரித்துள்ளது. ஆனால் ஆட்கள் பற்றாக்குறையால் பச்சை தேயிலை பறிக்க முடியாமல் மஞ்சூர் பகுதி விவசாயிகள் திணறி வருகிறார்கள். எனவே ஆட்கள் பற்றாக் குறையை சமாளிக்க இந்த பகுதி விவசாயிகள் நவீன இயந்திரம் மூலம் பச்சை தேயிலை பறிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.இந்த நவீன இயந்திரம் மூலம் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 400 கிலோ முதல் 600 கிலோ வரை பச்சை தேயிலை பறிக்க முடியும்.
எடை குறைவு
இந்த நவீன இயந்திரத்தால் தரமான பச்சை தேயிலை பறிக்க முடிகிறது. மேலும் தேயிலை பறித்த அடுத்த 30 நாட்களில் மீண்டும் அதே முறையில் நல்ல தரமான பச்சை தேயிலை பறிக்க முடிகிறது என விவசாயிகள் கூறுகின்றனர்.
இந்த நவீன இயந்திரம் ரூ.18 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை கிடைக்கிறது. இந்த நவீன இயந்திரத்தின் மொத்த எடை 9 கிலோவாகும். எடை குறைவாக உள்ளதால் எளிமையான முறையில் ஆண் தொழிலாளர் மட்டுமின்றி பெண் தொழிலாளர்களும் இந்த நவீன இயந்திரத்தை இயக்க முடியும்.
சிரமம்
இந்த நவீன இயந்திரம் மூலம் பச்சை தேயிலை பறிக்கும் தொழி லாளர் நடராஜன் கூறியதா வது:–
நீலகிரியில் பச்சை தேயிலை பறிக்க ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டதால் தேயிலை மகசூல் காலங்களில் பச்சை தேயிலை பறிப்பதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு நவீன இயந்திரம் மூலம் பச்சை தேயிலை பறிக்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது.இந்த நவீன இயந்திரம் இயக்குவதில் எந்தவித கஷ்டமும் கிடையாது. மிகவும் எளிதானது. இந்த நவீன இயந்திரம் மூலம் குறித்த நேரத்தில் பச்சை தேயிலை பறிப்பதால் நல்ல தரமான பச்சை தேயிலை பறிப்பதுடன் அடுத்த ஒரு மாத காலங்களில் மீண்டும் அதே மகசூல் பெற முடிகிறது.
மேலும் இந்த நவீன இயந்திரம் அனைத்து விவசாயிகளும் வாங்கி பயன் அடைந்து ஆட்கள் பற்றாக் குறையை எளிய முறையில் சமாளிப்பதுடன் நல்ல தர மான தேயிலை அளிக்கலாம்.இவ்வாறு விவசாயி நடராஜன் கூறினார்.

# கடலூரில், காய்கறிகள் விலை உயரும் அபாயம்

கடலூர் ஜூன்.28–
பெட்ரோல், டீசல் விலை உயர்வையொட்டி கடலூரில் காய்கறிகளின் விலை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வை வாபஸ் பெற வேண்டும் என கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## பெட்ரோல், டீசல் விலை உயர்வு

பெட்ரோல், டீசல், சமையல் கியாஸ் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது. இதற்கு நாடு முழுவதும் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த விலை உயர்வை வாபஸ் பெற வேண்டும் என எதிர்க் கட்சிகள் உள்பட பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர். மேலும் நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஏற்கனவே விலைவாசி உயர்வு விண்ணை தொடும் அளவுக்கு சென்று கொண்டிருக்கிற வேளையில் பெட்ரோலிய பொருட்களின் விலைகளை மீண்டும் மத்திய அரசு உயர்த்தியுள்ளதால் அத்தியாவசிய பொருட்கள், காய்கறிகளின் விலைகள் இன்னும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## காய்கறி விலை உயரும் அபாயம்

இதேபோல் சுற்றுலா வாகனங்களின் வாடகை கட்டணம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. இதனால் நீலகிரி மாவட்டத்துக்கு வரும் சுற்றுலா பயணிகள் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகியு உள்ளது. குறிப்பாக கடலூர் பகுதியில் விளையக் கூடிய காய்கறிகளும், கர்நாடக மாநிலம் குண்டல்பேட் பகுதியில் இருந்தும் கொண்டு வரக்கூடிய காய்கறிகளும் விற்கப் படுகின்றன. ஆனால் பெட்ரோல், டீசல் விலை உயர்வால் கர்நாடக மாநிலத்தில் இருந்து வரக்கூடிய காய்கறி களின் விலை உயரும் சமயத்தில் உள்ளூரில் விளைந்த காய்கறிகளும் அதே விலைக்கு விற்கப்படுகின்றன.

இதனால் காய்கறி விலைகள் அதிகரித்துள்ள நிலையில் பெட்ரோலிய பொருட்கள் விலை உயர்வால் இன்னும் அசுர வேகத்தில் விலைகள் உயரும் அபாயத்தில் உள்ளது. கடலூரில் தற்போதைய காய்கறிகளின் விலை (கிலோவுக்கு) விவரம்:

| | |
|---|---|
| முருங்கைக்காய் | – ரூ.60 |
| பீன்ஸ் | – ரூ.40 |
| உருளை கிழங்கு | – ரூ.20 |
| தக்காளி | – ரூ.24 |
| பாகற்காய் | – ரூ.32 |
| பெரிய வெங்காயம் | – ரூ.30 |
| கேரட் | – ரூ.40 |
| பீட்ரூட் | – ரூ.32 |
| கத்தரிக்காய் | – ரூ.24 |

இந்த விலையை விட இன்னும் கூடுதலாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வை வாபஸ் பெற வேண்டும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.